## ஆசிரியர் தேர்வு வாரியம்

## பத்திரிக்கைச் செய்தி

முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகைத் திட்டத்திற்கான தகுதித் தேர்வு (CMRF)

தமிழ்நாட்டில் உள்ள மாணாக்கர்களுக்கிடையே ஆராய்ச்சி திறனை வளர்க்கவும் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கவும் மாண்புமிகு முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகைத் திட்டத்திற்கான தகுதித் தேர்வு 2023 – 2024 ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முழு நேர ஆராய்ச்சி படிப்பிற்காக ( Full Time Ph.D Programme ) நிதியுதவி அளிக்கும் வகையில் தமிழ்நாட்டை சார்ந்த தகுதியான மாணாக்கர்களிடமிருந்து 2023 – 2024 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகை தகுதித் தேர்வுக்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலமாக வரவேற்கப்படுகின்றன.

இதன் தொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் (**https://trb.tn.gov.in/**) மேற்படி அறிவிக்கை 16.10.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் இணையதளம் வாயிலாக 20.10.2023 முதல் 15.11.2023 பிற்பகல் 5.00 மணிவரை விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாள் : 16.10.2023

இடம் : சென்னை – 6.

செயலாளர்